**_DEPOSITION OF WITNESS_**
**_<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>_**

**_<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT</u>_**
**_<u>Mannargudi</u>_**
**_<u>CC.No.164/2021– P.W. 7 (Add W )</u>_**

| | |
|---|---|
| *Name* | ககாரின் (கிராம நிர்வாக அலுவலர்) |
| *Father/Husband's Name* | அறிவழகன் |
| *Village* | சேந்தமங்கலம் |
| *Taluk* | திருவாரூர் |
| *Religion* | |
| *Age* | *42* |

**2ம் எதிரி ஆஜர்.** 1ம் **எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* 06.03.2026.

அரசு தரப்பில் தரப்பில் கு.வி.மு.ச. 311 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி அழைத்து அரசு தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1)** நான் தற்போது திருவாரூர் தாலுக்கா, கீழக்காவதுக்குடியில் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றி வருகிறேன். சாட்சி முத்துக்குமரன் என்பவரை தெரியும். அவர் நான் தண்டலையில் பணிபுரிந்தபோது எனக்கு கிராம உதவியாளராக என்னுடன் பணிபுரிந்த வகையில் எனக்கு நன்கு தெரியும். ஆஜர் 2வது எதிரி அஜித்குமார் என்பவரை தெரியாது. கடந்த 2020 ஆண்டு நான் தண்டலையில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். முத்துக்குமரன் என்பவர் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல.

2) நான் 2020 ஆண்டு தண்டலையில் பணிபுரிந்த போது, வருடத்தில் இறுதி மாதத்தில் எனக்கு திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்திலிருந்து மதியம் சுமார் 1 மணியளவில் எனக்கு போன் செய்து, காவலர்கள் ஒரு நபரை பிடித்து

வைத்துள்ளோம், அதற்கு நீங்கள் சாட்சியாக இருக்கும்படி சொன்னார்கள். அதன் அடிப்படையில் நானும், கிராம உதவியாளர் முத்துக்குமரன் என்பவரும், திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்திற்கு மதியம் சுமார் 1, 2 மணியளவில் சென்றோம். ஒரு நபர் காவல் நிலையத்தில் இருந்தார். அவர் பெயர் அஜித் என்று சொன்னார்கள். நான் அவரை பார்த்தேன். நான் பார்த்த நபர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை. போலிசார் இவர் தான் அஜித் என்று சொன்னார். பின்னர் ஒரு தாளில் இவர் தான் அஜித் என்று போலிசார் அடையாளம் காட்டியதையும், நான் பின்னர் அஜித்தை அடையாளம் காட்டுவேன் என்று அந்த தாளில் எழுதிக் கொடுத்தேன். நான் எவ்வித கையெழுத்தும் போடவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மேற்படி இந்த வழக்கு தொடர்பாக திருவாரூர் மாண்பமை குற்றவியல் தலைமை நீதிமன்றத்தில் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 13.11.2020 ஆம் ஆண்டு காலை சுமார் 07.00 மணியளவில் திருவாரூர் தாலுக்கா காவல் ஆய்வாளர் திருட்டு வழக்கில் எதிரிகள் சுதாகர், அஜித்குமார் ஆகியோர்களை சிங்காளஞ்சேரி ரயில்வே கேட் அருகில் கைது செய்திருப்பதாகவும், அதில் ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் தர இருப்பதாகவும், கூறியதாக அதற்கு என்னையும், கிராம உதவியாளர் முத்துக்குமரன் ஆகியோர்களையும் சாட்சிகளாக இருக்கும்படி எங்களை வரச்சொன்னார்கள் என்றும், நாங்கள் அன்றையதினமே காலை 8.15 மணியளவில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையம் சென்றோம் என்றும், அப்போது ஆஜர் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், கிராம உதவியாளர் முன்னிலையிலும், திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் பதிவு செய்துக்கொண்டார் என்றும், அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரி அவரது வீட்டின் பின்புறத்தில் தான் திருடிச் சென்ற தங்க நகைகளை மறைத்து வைத்திருப்பதாக கூறியதன் அடிப்படையில் எதிரி சுதாகர் என்பவருடன் வீட்டிற்கு போலிசாருடன் நாங்களும் சென்றிருந்தோம் என்றும், அப்போது எதிரி சுதாகர்

என்பவர் அவர் திருடிய தங்க பட்டை செயின் ஒன்றை எடுத்து போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும், அதை எங்கள் முன்னிலையில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைபற்றினார் என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளர் விசாரித்தபோது உண்மை சங்கதிகளை கூறினோம் என்று சொன்னால் இல்லை.

2) என்னுடைய உதவியாளர் முத்துக்குமரன் கையொப்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் அவர் அதிகமாக கையொப்பம் போடாததால் எனக்கு அவருடைய கையொப்பத்தை பற்றி சரியாக தெரியாது. உதவி ஆய்வாளரின் வருகை பதிவேட்டினை நான் பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த வருகை பதிவேட்டில் உதவியாளர் கையெழுத்து போடுவதில்லை. வருகை பதிவேட்டை எங்களது அலுவலகத்தில் பயன்படுத்தவில்லை. அதனால் அதுக்குறித்து நான் கேட்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் மற்றும் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையில் உள்ள கையொப்பம் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய கையொப்பத்தில் அந்த சுழியானது தொடக்கம் முதல் வந்துள்ளது. ஆனால் ஒப்புதல் வாக்குமூலத்தில் பாதிலியிருந்து கையொப்பம் தொடங்கப்பட்டுள்ளது. அது என்னுடைய கையொப்பம் இல்லை. போலிசார் வாக்குமூலத்திலும், போலிசார் விசாரணையிலும், உண்மை சம்பவத்தை கூறிவிட்டு, தற்சமயம் எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 06.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

1. மன்னார்குடி.